**செய்தி வெளியீடு எண் : 2107** **நாள் : 23.11.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

# மாண்புமிகு பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களை தலைமைச் செயலகத்தில் இன்று (23.11.2022) நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிவரும் சாலை ஆய்வாளர்கள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்கள்.

நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிவரும் சாலை ஆய்வாளர்கள் சங்க பிரதிநிதிகள் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களுடன் தலைமைச் செயலகத்தில் இன்று (23.11.2022) சந்தித்து சங்க கோரிக்கைகள் தொடர்பாக மனு அளித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் 1970ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் சாலை பணியாளர்கள், சாலை ஆய்வாளர்களை அரசுப் பணியாளர்களாக அறிவிக்க கோரிக்கை அளித்தார்கள்.
மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரையின் அடிப்படையில், அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள்.

1996ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருந்த 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட சாலைகளை பராமரிக்க 10 ஆயிரம் சாலை பணியாளர்கள் பணியிடத்தினை உருவாக்கினார்கள். அதன் அடிப்படையில்தான் சாலை பணியாளர்கள் 4 கி.மீ.–க்கு ஒரு நபர் வீதம் தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது, நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிவரும் சாலை ஆய்வாளர்கள் சங்க பிரதிநிதிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அளித்த மனுவில் குறிப்பிடப்பட்ட கோரிக்கைகளை ஒவ்வொன்றாக சங்க பிரநிதிகளுடன் விவாதித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சங்கத்தின் கோரிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. பிரதிப் யாதவ், இ.ஆ.ப., முதன்மை இயக்குநர் திரு. பி.ஆர்.குமார், தலைமைப் பொறியாளர் திரு. இரா. சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in